வேண்டும். குறிப்பாக மலையாளப் படங்கள் எல்லாம் ஆபாச சுவரொட்டிகளையும், ஆபாச தலைப்புகளையும் கொண்டு இங்கே திரையிடப்படுகின்றன. ஆகவே எப்படி தமிழ்ப் படங்களை சென்சார் செய்து காட்டுகிறோமோ அதைப்போல இங்கே திரையிடப்படுகிற எல்லா மாநிலப் படங்களையும் சென்சார் செய்து காட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா? அப்படிப்பட்ட ஆபாச தலைப்புகளும், சுவரொட்டிகளும் தமிழ்ப் படங்களில் வருவதில்லை, வேற்று மொழிப் படங்களில்தான் வருகின்றன. ஆகவே அவைகள் இங்கே சென்சாருக்கு உட்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

அகஸ்தியர் மற்றும் மணிமுத்தாறு அருவி பகுதிகளை

சுற்றுலா மையமாக்கல்.

608 — (* வினா எண் 5672) **திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர் அருவி, மணி முத்தாறு அருவி ஆகிய இடங்களை சுற்றுலா மையங்களாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர் அருவியில் அமைந்துள்ள பாபநாசம் என்ற இடம் மாவட்ட உலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பெற்று மேம்படுத்த 5.86 லட்சம் ரூபாய் மதிப் பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மணிமுத்தாறு அருவியை சுற்றுலாத்தலமாக மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாபநாசம் ஸ்தலத்தை இந்த வருடம் சுற்றுலாத் தலமாக அக்க திட்டப் பணிகள் நடைபெறுகின்றன என்று கூறியதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும்

அந்தப் பகுதியில் பல மலைவாசஸ்தலங்கள் இருக்கின்ற காரணத்தால், அகஸ்தியர் அருவிக்கு பக்கத்திலே அகஸ்தியர் வாழ்ந்த புனிதமான ஒரு கோவில் இருக்கிறது. இந்த ஸ்தலத்திற்கு அதிகமாக மக்கள் வருகின்ற காரணத்தால், அங்கே குறைந்த பட்சம் ஒரு இளைஞர் விடுதியையாவது கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பாபநாசத்தில் நடைபெறுகின்ற அந்தப் பணிகள் நிறைவுற்றதற்குப் பிறகு அடுத்த ஆண்டு இதைப்பற்றி அரசு பரிசீலிக்க இயலும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்தை மாவட்ட அளவிலே சுற்றுலா மையமாக அறிவிக்க, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இந்தியாவிலே புகழ் வாய்ந்த குற்றால நீர்வீழ்ச்சி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அதை தேசிய அளவிலே சுற்றுலாத் தலமாக அறிவிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா? இப்போது குற்றாலத்திலே இருக்கை வசதிகள் மற்றும் பல வசதிகள் பெருகி உள்ளன. ஆகவே இந்த ஏற்பாடுகளை எல்லாம் கருத்திலே கொண்டு, மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா? அவ்வாறு பரிந்துரை செய்வதற்கு என்ன அடிப்படை வசதிகள் வேண்டும். அவற்றை குற்றாலத்திலே செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே குற்றாலமும், அம்பாசமுத்திரமும் மாவட்ட உலாத் தலமாக அரசு ஏற்றுக்கொண்டு அதற்கான அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு இருக்கிறது. குற்றாலத்தைப் பொறுத்தவரையில் அது மாநில அளவிலே புகழ் பெற்ற ஒரு தலமாக விளங்கிக்கொண்டு இருக்கிறது. அதை தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும் என்று மாண்பமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். எந்த இடத்தையும் அப்படி சுற்றுலாத் தலமாக அறிவித்து அதை வளர்ச்சியுறச் செய்வதில்லை, அங்கே இருக்கின்ற இயற்கை சூழ்நிலைகளை மற்ற வசதிகளை வைத்துத்தான் மக்கள் அங்கே

வருவது அதிகரிக்க அதிகரிக்க அதனுடைய முக்கியத்துவமும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அந்த அளவில் இப்போது மாநில அளவிலே அங்கே வருகிற மக்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்து கொடுக்க நம்மால் முடியவில்லை. ஆகவே முதலிலே இந்த அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து, மாநிலத்திற்கு இன்றைக்கு ஒரு அருமையான சுகாதாரத்திற்கு உகந்த ஒரு தலமாக விளங்குகின்ற அந்த குற்றாலத்தை நாம் வைத்து பாதுகாக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறோம். ஆகவே தேசிய அளவில் அதைச் சுற்றுலாத் தலம் என்று அறிவிக்கின்ற முயற்சிகள் ஒன்றும் இப்போது எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. எதிர்காலத்தில் இந்தப் புகழ் பரவி, மக்கள் அங்கே வருகின்றபோது, அதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளை மக்கள் வருகைக்கு ஏற்பத்தான் செய்வது வழக்கமாக இருக்கிறது.

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் நடைபெறுகிறது. அது (All India Festival) என்ற முறையில் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கே இது தெரியும். திருவண்ணாமலை என்று சொன்னால், அங்கு என்ன விசேஷம் என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு புகழ் பெற்ற தலமாக இருக்கிற அந்த இடத்தில், அன்றாடம் தமிழகத்திலே இருந்து மக்கள்—சென்னைக்கு அடுத்தபடியாக மேல்நாட்டுக்காரர்கள் அதிகமாக வருகிற இடமாக இருக்கிற அந்த திருவண்ணாமலையை சுற்றுலா மையமாக அமைக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

அதேபோன்று அதைச் சுற்றி இருக்கிற, 15 கி.மீ. தூரத்தில் உள்ள சாத்தனூர் அணைக்கு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது முதலமைச்சரோடு வந்திருக்கிறார்கள். அங்கே ஒரு நாளைக்கு 500 பயணிகள் வருகிறார்கள். எனவே இதையும் சுற்றுலா மையமாக ஆக்குகிற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படி இல்லை என்றால், இனி மேலாவது அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகஸ்தியா மாமுனிவர் வாழ்ந்த இடம் அது. அதை மாவட்ட சுற்றுலா மையமாக இருப்பதை மாற்றி, மாநில சுற்றுலா மையமாக ஏற்றுக்கொண்டு, உணவு வசதியையும், பேருந்து வசதியையும், தங்குவதற்கான வசதிகளையும், இதுபோன்ற பாதுகாப்பாக வசதிகளையும் செய்வதற்கு ஏற்பாடு செய்யப் படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அகத்திய முனிவர் வாழ்ந்ததாக ஒரு தொன்மையான கதைகூட இருந்து வருகிறது என்றாலும் கூட அது தமிழகத்திற்குச் சிறப்பு சேர்க்கின்ற ஒரு மலைப் பகுதியாகும். தென்றல் காற்று என்கின்ற தமிழகத்தின் சிறப்புமிக்க காற்று அந்த பொதிகை மலையிலிருந்து எழுவதாக பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் உலக இலக்கியத்தில் இடம் பெறுகின்ற ஒரு அருமையான பாடலை இயற்றிக் காட்டியிருக் கிறார்கள். ஆகவே அது சிறப்பு வாய்ந்த மலைப் பகுதி என்பதும் அங்கே வரலாற்றுச் சிறப்புகள் இருக்கின்றன என்பதும் அரசு உணர்ந்து இருக்கிறது. ஆகவே முறையாக அதற்கு அடிப்படை வசதிகளைச் செய்து மக்களுடைய வருகையை அதிகரிப்பதற்கு படிப்படியாகத்தான் நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. தி. நா. கோ. அ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமயக் குரவர்கள், சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்ந்த திருநாவலூரையும், சடையப்ப வள்ளல் வாழ்ந்த திருவெண்ணெய்நல்லூரையும் சுற்றுலா ஸ்தலமாக்க அரசு முன்வருமா என்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. ஆகவே தனிக் கேள்வி போட வேண்டும்.